# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்

**பயிற்சிப் பரீட்சை - பெப்ரவரி 2018**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**2**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ................................ பெயர் ................................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (....................................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | ................................ பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ................................ பெயர் ................................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

- **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

**01)** நன்றி மறந்தவரை உலகம் "நன்றி கெட்டவர்" எனக் கூறிவிடும் எனப் பயந்து வாழ்ந்தவர் சிலர் உளர். அவர்கள் நன்றி மறந்தவர்களாகத் தாம் ஆகிவிடக் கூடாது என்பதற்காக அநீதியின் பக்கம் சாய்ந்தவர்களானார்கள். கர்ணன் அத்தகையவருள் ஒருவன். பாண்டவர் தன் தம்பியார் என அறிந்த பின்னரும் அவர்கள் பக்கம் சேரவில்லை. தன் நண்பனான துரியோதனன் செய்த உதவிக்காகச் செய்ந்நன்றி மறவாத வீரனானான்.

- **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01) நன்றி மறவாத வீரன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

..........................................................................................................

02) கர்ணனின் நண்பன் யார்?

..........................................................................................................

03) "வையகம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

..........................................................................................................

04) "வீரனானான்" என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.

..........................................................................................................

05) விசிறியும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

..........................................................................................................

06.) பந்தியில் ஒரு முறை இடம்பெற்றுள்ள நிறுத்தக்குறியின் பெயரை எழுதுக.

..........................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02) சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) கைமாறு / கைம்மாறு

2) எண்ணை / எண்ணெய்

(2 x 1 = 2 புள்ளிகள்)

**03) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) எனது வீட்டு முற்றத்தில் மலரும் ஒவ்வொரு பூவும் வாசனை .................................. (மிக்கவை/ மிக்கது).

2) நல்ல நூல்கள் நல்ல நண்பர்களைப் ............................................ (போன்றன / போன்றது).

3) தர்ணியோடு கஜி நடந்து ........................................ (வந்தனர் / வந்தாள்)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

மயில் அகவும் போல எருமை ........................................................ (1 புள்ளி)

**05) கீழே தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி குறட்பாவைப் பூரணப்படுத்துக.**

"நன்றி மறப்பது .................................................... நன்றல்ல

..................................................... மறப்பது நன்று."

(2 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**06) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ............................................................... (1 புள்ளி)

**07) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) பரீட்சையில் சித்தியடைவதற்காக மபிஷா ........................................................ (சீரும் சிறப்புமாக / அல்லும் பகலும்) பாடுபட்டுப் படித்தாள்.

2) தென்றல் ............................................ (கமகம / குளுகுளு) என வீசியது.

3) அவர்கள் கடினமாக உழைத்தார்கள். இங்கு அவர்கள் என்பது .................................................. (படர்க்கைப் பன்மை / முன்னிலைப் பன்மை)

4) சிறுவர்கள் **வாய்காட்டிப் பேசுதல் கூடாது**. தடித்த எழுத்திலுள்ள மரபுத்தொடரின் கருத்து ....................................................... (எதிர்த்துப் பேசுதல் / நாக்குக் கடித்தல்)

(4 x 1 = 4 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள கவிதையிலுள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

சத்தியம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை

..............................................................
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை.

(2 புள்ளிகள்)

**09) கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

உன்னுயிரைப் போல இந்த
உலகில் உயிரையெல்லாம்
மன்னும் அன்போடு நீ - என்றும்
மதித்து வாழ வேண்டும்.

1) இப்பாடலில் வரும் உவமைத் தொடரை எழுதுக.

.............................................................................................................................................

2) இப்பாடல் வரிகளை இயற்றியவர் யார்?

.............................................................................................................................................


(2 x 1 = 2 புள்ளிகள்)

**10) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

1) Rainbow - ................................................ 2) Pond -.................................................

(2 x 1= 2 புள்ளிகள்)

**11)**



உருவில் தரப்பட்டுள்ள பறவையின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

........................................................

(1 புள்ளி)

**12) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

*1)* Please give me ( a / an ) ..................... umbrella.

*2)* These ..................... (is / are) my frocks.

(2 x 1 = 2 புள்ளிகள்)

**13) கீழே தரப்பட்டுள்ள வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

*1)* நான் உங்களுக்கு உதவலாமா?

........................................................................................................................................

( 2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

*முங்அ(ட்)ட :* ........................................................................ (1 புள்ளி)

**15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

*முட்டை என்ன விலை?*

........................................................................................................................................

( 2 புள்ளிகள்)

**16) இன்று மக்கள் மத்தியில் பொலித்தீனானது தவிர்க்க முடியாத பாவனைப் பொருளாகிவிட்டது. எனினும் எம் சூழலைப் பாதுகாப்பதற்காக இப்பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அந்த வகையில் "பொலித்தீன் பாவனையால் ஏற்படும் விளைவுகள்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக அமைதல் வேண்டும்.)**

*1)* ........................................................................................................................................

........................................................................................................................................

*2)* ........................................................................................................................................

........................................................................................................................................

*3)* ........................................................................................................................................

........................................................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

- **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**

**17)** *1)* எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக.

ஆயிரத்துத் தொண்ணூறு ........................................................................

| | |
|---|---|
| 1 | 9 |
| 3 | 0 |

*2)* தரப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச் சிறிய எண்ணை எழுதுக. ....................................................


**18)** மூன்று தீக்குச்சிகளால் ஆக்கக் கூடிய பத்திற்குட்பட்ட உரோமன் எண்கள் எத்தனை? .......................

**19) தரப்பட்டுள்ள எண்கோலங்களில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.**

*1) 39, 28, ................, 12, 7, 4*

*2) 10, 15, 25, 40, ................ , 85*

**20)** **ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவைக் கொண்ட 10 சதுரங்களினால் ஆன உரு இங்கு காட்டப் பட்டுள்ளது.**




*1) இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னமாகும்?*

.............................................................................................................

*2) நிறந்தீட்டிய பகுதியின் பரப்பளவு யாது?*

..........................................................................

**21)**



*இந்தத் திண்ம உருவின்,*


*1) முகங்கள் எத்தனை?* ..................................

*2) விளிம்புகள் எத்தனை?* ..................................

**22)** *முற்பகல் 8.15 இற்குப் படிக்கத் தொடங்கிய ரக்ஷி முற்பகல் 11.20 இற்குப் படித்து முடித்தாள் எனின்,*

*ரக்ஷி படிப்பதற்கு எடுத்த நேரம் எவ்வளவு?* ..........................................................................................


**23)**




*இவ்வுருவின் சுற்றளவு யாது?*

.....................................................


**24)**




*இங்கே A பாத்திரம் மூலம் B பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு A பாத்திரத்தால் எத்தனை தடவை ஊற்ற வேண்டும்?*

..............................................

**25)**




இப்படம் ஆறு நகரங்களுக்கு இடையிலான தூரம் பற்றிய தகவல்களுடன் காணப்படுகின்றது.

S இலிருந்து T இற்கான தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும்? ............................................................

**26)** *ஒரு வைத்தியர் நோயாளி ஒருவருக்கு காலை, மதியம், இரவு மருந்தாக ஒரு வேளைக்கு 3 மாத்திரைகள் வீதம் 6 நாட்களுக்கு மாத்திரைகள் வழங்கினார். அந்நோயாளிக்கு வைத்தியர் வழங்கிய மாத்திரைகள் எத்தனை?*

.................................................................

**27)** 8kg, 750g நிறையுள்ள சீனியை 250g நிறை கொண்ட எத்தனை சிறிய பொதிகள் ஆக்கலாம்?

.................................................................


**28)** அபி கடையொன்றிற்குச் சென்று ரூபா 25.50 பெறுமதியுள்ள கொப்பிகள் இரண்டும் ரூபா 13.50 பெறுமதியுள்ள பேனைகள் மூன்றும் வாங்கிய பின் கடைக்காரரிடம் ரூபா 100.00 இனைக் கொடுத்தாள். கடைக்காரர் அபிக்கு கொடுத்த மீதிப் பணம் எவ்வளவு?

..........................................................................

**29)** யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட புகையிரத்தில் 6584 பயணிகள் பயணித்தனர். இவர்களில் 2896 பேர் புத்தளத்தில் இறங்கிய போது 1362 பயணிகள் ஏறினார்கள். தற்போது புகையிர தத்திலுள்ள பயணிகள் எத்தனை பேர்?

..........................................................................

**30)** **ஒரு பாடசாலையில் 2018 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைவர் என எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை வகை குறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட் டுள்ளது.**




1) தரம் - 5B இல் சித்தியடைவர் என எதிர்பார்க் கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தரம் - 5D இல் எதிர்பார்க்கப்படும் மாணவர் களின் எண்ணிக்கையின் நான்கு மடங்காகும். தரம் 5D இல் எதிர்பார்க்கப்படும் மாணவர் களின் எண்ணிக்கையை வரைபில் வரைந்து காட்டுக.

2) அப் பாடசாலையில் சித்தியடைவர் என எதிர் பார்க்கப்படும் மாணவர்களின் மொத்த எண் ணிக்கை யாது?

..........................................................................

(15 x 2 = 30 புள்ளிகள்)

- **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடை களிலிருந்து தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

**31)** தியானச் செயற்பாட்டின் மூன்றாவது படிநிலை எது?
1) உடலைத் தளர்த்தல். 2) மனவுறுதி 3) மலர்வு 4) பிரார்த்தனை

**32)** சூரிய நமஸ்கார செயற்பாட்டில் ஒரே மாதிரியாக அமையும் செயற்பாடுகள் அடங்கிய விடை,
1) 8 உம், 12 உம் 2) 2 உம், 12 உம்
3) 8 உம், 11 உம் 4) 4 உம், 10 உம்

**33)** எல்லாக் காலங்களிலும் பூக்கும் தாவரம்,
1) வேம்பு 2) இலுப்பை 3) தென்னை 4) ரம்புட்டான்

**34)** தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணி அல்லாதது,
1) கொக்கு 2) மைனா 3) தேவாங்கு 4) புறா

**35)** இலைகளில் முட்கள் காணப்படும் தாவரம் எது?
1) நொச்சி 2) தொட்டாற்சுருங்கி
3) ஆடாதோடா 4) தூதுவளை

**36)** சிக்குன்குனியா நோயைப் பரப்பும் பிராணி,
1) எலி 2) குரங்கு 3) பூனை 4) நுளம்பு

37) 

இவ்வுருவிலுள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவோர்,

1) மேசன் 2) உழவர்
3) மீனவர் 4) தச்சுத் தொழிலாளர்

38) **சோற்றின் மூலம் கிடைக்கும் போசணைக்குப் பதிலாக உண்ணக் கூடிய உணவு,**

1) முட்டை 2) கருப்பட்டி 3) இறைச்சி 4) சோயா

39) உப்பிட்டு வைப்பதன் மூலம் நீண்ட நாள் பாதுகாக்கக் கூடியது

1) பலாச்சுளை 2) ஈரப்பலா 3) மாம்பழம் 4) எலுமிச்சை


40) 

அயடின் சேர்க்கப்பட்ட உப்பு பொதியில் காணப்படும் இக் குறியீடு உணர்த்துவது

1) குழாய் நீரில் கழுவவும்.
2) ஈரலிப்பான இடத்தில் வைக்க வேண்டாம்.
3) வெந்நீரில் மாத்திரம் கழுவவும்.
4) கழுவாமல் பயன்படுத்தவும்.

41) தேசிய கீதம் இசைக்கப்படுவது

1) தேசியக் கொடி ஏற்றும் போது 2) தேசியக் கொடி ஏற்ற முன்
3) தேசியக் கொடி ஏற்றிய பின் 4) தேசியக் கொடி ஏற்றத் தொடங்கும் போது

42) 

உருவில் உள்ளவர்,

1) டி. பி. ஜயதிலக்க 2) அனகரிக தர்மபால
3) விபுலானந்தர் 4) கொங்காலே கொடபன்டா

43) குளிர்பானப் போத்தல்களில் சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ள வட்டம் குறிப்பது,

1) அளவான சீனி 2) அதிகமான சீனி 3) குறைவான சீனி 4) ஓரளவான சீனி

44) 

இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?

1) நொருங்கக் கூடியது.
2) உடைந்த பொருள்
3) மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம்.
4) கவனமாகக் கையாள வேண்டும்.

45) நீர் நிரம்பிய ஒரு போத்தலின் வாயைத் தேநீர் வடியினால் மூடி உருவில் உள்ளவாறு கவிழ்த்துப் பிடிக்கும் போது போத்தலில் உள்ள நீர்,

1) துளித்துளியாக விழும் 2) அருவி போல் பாயும்.
3) மழை போல் பொழியும் 4) விழாமல் இருக்கும்.



46) நீரைப் பற்றிப் பிழையான கூற்றாக அமைவது

1) நீருக்கு நிலையான வடிவம் இல்லை.
2) நீர் கரைக்கும் இயல்பினைக் கொண்டது.
3) நீர் பரவிச் செல்லும் இயல்பினைக் கொண்டது.
4) நீர் குறித்த வடிவத்தைக் கொண்டது.

**47)** இலங்கைக்கு அருகே அமைந்துள்ள நாடுகளைக் கொண்ட தொகுதி
1) இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், கியூபா
2) இந்தியா, பூட்டான், நேபாளம், மாலைதீவு
3) பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், லிபியா
4) இந்தியா, பூட்டான், அந்தமான்தீவு, யப்பான்

**48)** இலங்கையில் படகமுவ வனம் அமைந்துள்ள மாவட்டம்
1) பொலன்னறுவை 2) அனுராதபுரம் 3) குருநாகல் 4) அம்பாந்தோட்டை

**49)** வாகனமொன்று இடப்பக்கம் / வலப்பக்கம் திரும்பும் போது ஒளிரும் விளக்கின் நிறம்
1) பச்சை 2) சிவப்பு 3) மஞ்சள் 4) வெள்ளை

**50)** தேசப்படங்களில் மலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம்
1) கறுப்பு 2) சிவப்பு 3) மஞ்சள் 4) கபிலம்

**51)** நீல நிறப் பின்னணியில் வெள்ளைநிற முக்கோணியினுள்ள இவ் வீதிக் குறியீடு குறிப்பது




1) சிறுவர்கள் கடக்கும் இடம்.
2) சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னால்.
3) சிறுவர்கள் இங்கு கடக்க வேண்டாம்.
4) மெதுவாகப் பாதையைக் கடக்கவும்.

**52)** வீட்டுத் தோட்டத்தில் வளரும் களைப்பூண்டு
1) கங்குன் 2) பசளி 3) அறுகு 4) கடுகு


**53)** வீட்டுத் தோட்டத்தின் பாதுகாப்பிற்காக சாய்வான ஆதாரத் தடிகளைக் கொண்டு அமைக்கப்படும் வேலியின் தடிகளுக்கிடையில் இருக்க வேண்டிய இடைவெளி
1) 30 சென்ரிமீற்றர் 2) 100 சென்ரிமீற்றர் 3) 80 சென்ரிமீற்றர் 4) 125 சென்ரிமீற்றர்

**54)** ஏலந் தண்டு ராமனாதா ..... ஏலந்தண்டு ராமனாதா.......... எனத் தொடங்கும் பாடல்
1) கப்பற் பாட்டு 2) மீன்பிடிப் பாடல் 3) தாலாட்டுப் பாடல் 4) தோணிப் பாடல்


**55)** பின்வருவனவற்றில் மின்குமிழ் ஒளிரக் கூடிய மின்சுற்றாக அமைவது




1)



2)



3)



4)

**56)** வித்துக்களைப் பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கம்
1) ஓரிகாமி 2) அல்பனா 3) கொலாச் 4) ஸ்ரென்சில்

**57)** தாழ்வான நடத்தையின் மூலம் ஏற்படக் கூடிய விளைவாக அமைவது
1) பிரச்சினை தீரும் 2) நற்பெயர் உண்டாகும்.
3) சுயகௌரவம் பாதிக்கப்படும். 4) கௌரவம் பாதுகாக்கப்படும்.

**58)** ஒரே மாதத்தில் இரு பௌர்ணமிகள் வரும்போது இரண்டாவதாக தோன்றும் பௌர்ணமி
1) சிவப்பு நிலவு 2) மஞ்சள் நிலவு 3) செம்மஞ்சள்நிலவு 4) நீல நிலவு

**59)** மாத்தறை நகரில் கடலுடன் கலக்கும் நதி
1) நில்வள கங்கை 2) மாணிக்க கங்கை 3) களு கங்கை 4) ஜின் கங்கை

**60)** இலங்கைக்கே உரிய முலையூட்டி
1) வௌவால் 2) மரநாய் 3) யானை 4) கொம்பு ஓணான்

(30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 02 இன் விடைகள்

**தரம் - 05** **2** **வினாத்தாள் - II**

01. 1) கர்ணன் 2) துரியோதனன் 3) உலகம் 4) வீரன் + ஆனான்
5) வீரனானான் / அநீதி 6) மேற்கோட்குறி
(6 x 1) = 6 புள்ளிகள்)

02. 1) கைம்மாறு 2) எண்ணெய் (2 x 1) = 2 புள்ளிகள்)

03. 1) மிக்கது 2) போன்றன 3) வந்தாள் (3 x 1) = 3 புள்ளிகள்)

04. எக்காளமிடும் ( 1 புள்ளி)

05. நன்றன்று, தன்றே (2 புள்ளிகள்)

06. வேட்பாளர் (1 புள்ளி)

07. 1) அல்லும்பகலும் 2) குளுகுளு 3) படர்க்கைப் பன்மை 4) எதிர்த்துப் பேசுதல்
(4 x 1) = 4 புள்ளிகள்)

08. இத்தல மக்கள் யாவர்க்கும். (2 x 1) = 2 புள்ளிகள்)

09. 1) உன்னுயிரைப் போல 2) தேசிக விநாயகம்பிள்ளை (2 x 1) = 2 புள்ளிகள்)

10. 1) வானவில் 2) குளம் (2 x 1) = 2 புள்ளிகள்)

11. Peacock (1 புள்ளி)

12. 1) an 2) are (2 x 1) = 2 புள்ளிகள்)

13. Can I help you? (2 x 1) = 2 புள்ளிகள்)

14. பயறு (1 புள்ளி)

15. பி(த்)தற மில கீயத? (2 புள்ளிகள்)

16. பொருத்தமான வாக்கியங்கள் எழுதி இருப்பின் புள்ளி வழங்குக. (3 x 2) = 6 புள்ளிகள்)

17. 1) 1090 2) 1039

18. நான்கு / 4

19. 1) 19 (11, 9, 7 எண்குறைதல்) 2) 60 (5, 10, 15 எண்கூடுதல்)

20. 1) $\frac{6}{10}$, $\frac{3}{5}$ 2) $4cm^2$ / 4 சதுர சென்ரிமீற்றர்

21. 1) முகங்கள் - 4 2) விளிம்புகள் - 6

22. 03 மணித்தியாலம் 05 நிமிடம் / 3.05 மணித்தியாலம்

23. 32cm / 32 சென்ரிமீற்றர்

24. 8 தடவை

25. 80km

26. 54 மாத்திரைகள்

27. 35 பொதிகள்

28. ரூ 8.50

29. 5050 பயணிகள்

30. 1) 4 கட்டடங்களிற்கு வரைதல். 2) 38 மாணவர்கள்
(2 x 15 = 30 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 31) 2 | 32) 3 | 33) 3 | 34) 4 | 35) 4 |
| 36) 4 | 37) 2 | 38) 2 | 39) 4 | 40) 4 |
| 41) 3 | 42) 3 | 43) 2 | 44) 4 | 45) 4 |
| 46) 4 | 47) 2 | 48) 3 | 49) 3 | 50) 4 |
| 51) 1 | 52) 1 | 53) 1 | 54) 4 | 55) 3 |
| 56) 2 | 57) 3 | 58) 4 | 59) 1 | 60) 2 |

(1 x 3 = 30 புள்ளிகள்)

**(தெளிவாகவும் உறுப்பாகவும் விடையளித்தால் 1 புள்ளி வழங்குக.)**

The National e-learning Portal for the General Education